July 1911. Registered No. M. 925.

# செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது ௵ ஆடி-மீ 1-உ [பகுதி-4.

உள்ளுறை. பக்கம்.


| | |
|---|---|
| தமிழ் மொழி. | 73 |
| பெற்றோர்கடமை. | 77 |
| பௌத்தமதம். | 81 |
| மகா கொடியது. | 84 |
| மங்கைக்கரசி அல்லது மாண்புடைமனைவி. | 87 |
| புத்தக வரவுகள். | 92 |
| சமாச்சாரக்குறிப்புகள். | 95 |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம். சுந்தரநாதபிள்ளை,
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4.
Copy Right Registered.
வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2.

விளம்பர விகிதம் பக்கம் ஒன்றுக்கு ரூ. 1—8—0.
...பத்திரிகை. 0—8—0.

லெக்ஷ்மி விலாஸ் பிரஸ், திருச்சி.

# சந்தாதாரர்கள் பால் வேண்டிக்கொள்வது.

பத்திரிகைகள் சிறப்புற்றோங்கி என்றும் நின்று நிலவுதற்கு சந்தாதாரர்களே காரணம். இது எவர்க்கும் தெரிந்ததே.

ஆகையால் செந்தமிழ்ச் செல்வத்தின் சந்தாதாரர்களாகிய தமிழபிமானமுடைய கனவான்களே! சகோதரர்களே!!

தயை செய்து சந்தாவை அனுப்பி எமக்கு ஊக்கத்தை உண்டாக்கி நமது பத்திரிகையை நின்று நிலவுமாறு செய்ய உங்களை எல்லாம் பெரிதும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இம்மாதம் சந்தாவை அனுப்பாதிருப்பின் அடுத்த மாதம் வி. பி. தபாலில் பத்திரிகை வரும் அப்போது மறுத்துவிட்டு எமக்கு நஷ்டப்படுத்தி எம் நன் முயற்சிக்குத்தளர்ச்சி செய்வோராகாதிருக்க வேண்டிக்கொள்ளுகின்றோம்.

பத்திராதிபர்.

ஐயன்மீர்!

அச்சுக்கூட மாற்றுதலினாலும் எனது பெரிய தந்தையார் சோடசதவதான அவதானம் மகா-ா-ா-ஸ்ரீ கி. அ. சோ. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் காலஞ்சென்றமையாலும் சில நாள் தாமதித்து நமது செந்தமிழ்ச்செல்வம் வெளியாகின்றது. இனிமேல் தாமதமின்றிக்குறித்த நாளிலேயே வந்துகொண்டிருக்கும். அச்சாபீஸ்காரர்கள் செய்தி எவரும் அறிந்ததே. அவர்களாலேயே பத்திரிகை பிந்துகின்றது, என்றாலும் எம் முயற்சி முந்துகின்றது. தயைசெய்து மன்னிக்க வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

# செந்தமிழ்ச் செல்வம்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-1.] விரோதிகிருது-ஸு ஆடி-மீ 1-உ [ பகுதி-4


## * தமிழ்மொழி.

தமிழ் மொழியின் சிறப்புகளனைத்தையும் எடுத்து எழுதுவதென்பது எத்துணை ஆற்றலுடையார்க்குமாகாததொன்றாம்.

தமிழ் மொழியின் சிறப்புக்களோ மிக்க கல்வி கற்றறிந்து ஒழுகும் ஆற்றலுடையாரொருவன் தனக்கேற்பட்ட நீண்ட ஆயுள் நாள் முழுதும் இடைவிடாது செலுத்தி எழுதினும் முடிவுறாது, விரிந்து, அடங்காது அவனுரைக்கும் மேற்பட்டு நிற்கும் பெற்றியுடையனவாம்.

என்றாலும் தமிழின் அருமை பெருமைகளனைத்துங் காட்டுமாறு, தமிழினது சிறப்பு, தமிழின் தெய்வீகம், தமிழ்மொழியின் பழமை, தமிழே எம்மொழிக்கும் முந்தியது, தமிழும்ஆரியமும், தமிழ்மொழியின் நூற்பெருக்கம், தமிழ்மொழிப்புலவர்கள், என்னுந்தலைப்புடனும் இன்னோரன்ன பல தலைப்புடனும் வியாசங்கள் எம்மாலும் எமது நண்பர்களாலும் எழுதப்பெற்று நமது "செந்தமிழ்ச்செல்வத்தின்" வாயிலாய்வர இருப்பதால் இப்பொழுது "தமிழ்மொழி" என்பதைத் தலைப்பாகக் கொண்டுள்ள இவ்வியாசத்தைச் சிறுவரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளுமாறு சுருக்கித் தெள்ளிய செந்தமிழ் நடையில் பிண்டமாக எழுதுகின்றோம்.

தமிழ்மொழி "தமிழ்" எனத்தனித்துநின்றே இனிமையுடையது என்று பொருள் தரும். நறுமணமுடையதெனினும் பொருந்தும்.

---

* "செந்தமிழ்ச்செல்வம்" என்னும் நமது பத்திரிகையின் சந்தாதார்களிற் பெரும்பாலாரின் விருப்பத்தை ஒட்டியே விஷயங்கள் எழுதவேண்டியிருப்பதால் சில வித்துவான்களின் விருப்பப்படி பத்திரிகை முழுவதும் இலக்கண இலக்கிய சம்பந்தமாக இருப்பதற்கில்லாதிருக்கின்றது. பத்திரிகையும் பலருக்கும் பயன்படுமாறே இருக்கவேண்டுமென்பதே எமது அபிப்பிராயம்.

இஃதன்றி, த்ாம்+ழ் எனப்பிரித்து தம்மைத்தாமே யொத்த தேன்றுளி மொழிகளையுடையது என்று பொருள் கூறுவாருமுண்டு. தமிழ் என்னுஞ் சொல் குமிழ், உமிழ், கமழ், இகழ் புகழ், எனழகரப்பேறுபெற்ற சொற்கள் போல தனிமைப்பொருள் குறித்திடும் தமியென்னும் வினை படியாற் பிறந்து வினை முதற்பொருளுணர்த்திய விகுதி குன்றி ழகரம் விரிந்து நின்றதென ஒருசாராரும், "தமிழு" என்னுஞ் சொல் "தமிழ்" என உகரம் புணர்ந்து கெட்டு நின்றதோர் மொழியென ஒரு சாராரும் கூறுகின்றனர். இவைகள் பெரிதும் பொருத்தமுடையனவே.

மற்றுமொரு சாரார் "திராவிடம்" என்னுஞ் சொல் "திரமிளம்" என்றாய்த் திரமிளம் என்பது "தமிழ்" எனத்திரிந்தது என்பர் இது பொருந்தா வெற்றுரையாம் மென்பதைப் புலவர்கள் தம்மனத் தராசின் கண் நிறுத்து அளந்து பலருங்காணத் தெளிவாய்க் காட்டியிருக்கின்றனர்.

இதுநிற்க, நமது தாய் மொழியாகிய தமிழ் மொழிக்குத் 'தமிழ்' என அமைந்தபேர்ப் பொருத்தம் மிகப் பொருத்தமுடையதும் கண்டவர் மெய் மறந்து உளங்களிகொண்டு துதிக்கத்தக்கதுமேயாம்.

'தமிழ்' என்பது த்+அ+ம்+இ+ழ் என்னும் ஐந்து பிரிவினையுடையது, த், ம், ழ், ஜடசித்கலை, அ, இ, சித்கலை.

அ= அகண்டாகார சித்தை விளக்கும், ஓங்காரப் பஞ்சாக்கரத்திற் பதிநிலையக் கரமாம்.

இ=பதியைவிட்டு நீங்காத சித்தை விளக்கும், வியவகாரத்தால் அனந்தாகார வியஷ்டி பேதங்காட்டும் ஜீவசித்கலையக் கரமாம்.

த்+அ ஏழாவது நிலையாகிய 'த' என்பது சிவரூப இயற்கை உண்மைக் கட்டளையாம். முதலுயிராகிய அகாரம் இயற்கை யுண்மைப் பரிபூரணப் பொருளிலக்காம். (த்+அ) 'த' என்ற எழுத்தால் தகராகாசத்தில் சுத்த சிவமாகும் அருட் பெருஞ் சோதியமைந்துள்ள பூரணானந்த ஸ்வரூப பரபதி தெளிவாயிற்று.

ம்+இ, சங்கரப்பிரணவமாகிய மகாரம் பத்தாவது நிலையமாகிய ஆன்மாதாரமெனப் பொருளாம். இ, மூன்றாவதாகிய இகாரம் சுத்த விஞ்ஞான கலராகிய சிதாத்மாக்களைச் சுட்டுகின்றது.

இதனால் ஆதார ஆதேயக் கூட்டரவால் என்றுந் தோன்றி விளங்கும் சிதான்ம வருக்கங்கள் பரபதி லக்ஷியமாகிய பூரணானந்தத்திற்கு அநுபவிகளாக உரியவர்கள் என்பதைக் குறிக்கின்றது.

ழ், தமிழ்மொழியின் சிறப்பெழுத்துகளின் முடியாய் விளங்குன்ற ழகர மெய் முடி நிலை இன்பாநுபவ சுத்த மோனநிதத்தைச் சுட்டறச்சுட்டும் இயற்கை யுண்மைத் தனித்தகமைச் சிறப்புறு மொலியாம். இதனால் விளங்குங்கருத் தென்னையோவெனில் தமிழ் மொழியே மிக இலேசாக சுத்த சிவாநுபூதியைக் கொடுக்கும் என்பதாம்.

இதல்லாமல் தமிழ் எனப்பெயர் நின்ற நிலையால் தன்னகத்துள்ள எழுத்துக்களையும் சுட்டி நிற்கின்றது அஃதெவ்வாறெனிற் கூறுதும்.

அகர இகர உயிர்களும் புணர்ந்துகெட்ட உகாரமும் உயிர் பன்னிரண்டொடு விளக்குகின்றது குறிலின் விகாரமே நெடிலாதலால் அ இ உ என்ற வடிவால் அ ஆ இ ஈ உ ஊ என்றதும் அகரமும் இகரமுஞ் சேர்ந்து எகரமும் அகரமும் உகரமும் சேர்ந்து ஒகரமும் தோன்றி குறிலும் நெடிலும் அமைந்துள்ளமையாலும் ஐகாரமும் ஔகாரமும் இகர உகரங்களுக்கினமாதலால் ஐகாரமும் ஔகாரமும் தன்னகத்தே கொண்டிருத்தலைக் காட்டி உயிர் அகர முதலாக பிறப்பின் முறையாய் இகரமும் உகரமும் முறையே தோன்றி அவைகள் ஈராறு எழுத்துக்களாய் முறைபட நின்றிருத்தலை விளக்குகின்றது.

த்+ம்+ழ் என்னும் மூன்று மெய்களும் வல்லினம் மெல்லினம் இடையினம் என்னும் மூன்றினத்திலும் சிறப்பெழுத்துக்களாம். இவை மூன்றும் தமிழ் என்ற மொழியின் பெயரில் அமைந்தது மெய் யெழுத்துக்கள் மூன்றினமுடையதென்பதைத் தெளிவாகக் காட்டி உயிரோடு கூடியே இயங்கும் தன்மை யுடையதென்பதையும் பேர் கேட்டார்க்குப் பொள்ளென விளங்கும்படி அமைந்துள்ளது. இதனானே தமிழ் மொழி பதியையும் தன்னையுமுணர்த்திப்பாச நீக்கத்தைச்செய்து முத்தியைத் தருமென்பதும், எழுத்துக்கள் முறைபட இயற்கைக்கு மாறுபாடின்றி நிற்கும் இலேசிலே மக்களால் உச்சரிக்கக்கூடிய விரிவில்லாத சுருக்கமான முப்பது முதலெழுத்துக்களையுடையதென்பதும் இன்னோரன்ன பல் இனிய அரும் பெரும் விஷயங்களைக்காட்டி நிற்கும் இனிமை என்னும் பொருள்கொண்ட 'தமிழ்' என்னும் சொல்லைத் தனக்குப் பெயராகக்கொண்டு விளங்கும் தமிழ் மொழி எம்மொழியினும் பழமைபட்டதென்பதும் ஏனைய சிலமொழிகள் போல ஒரு நாளிலேயே ஒன்பதினாயிரம் புது இலக்கணங்கள் கற்பிக்க இடந்தந்து அதுவும் பொருந்தாது அழிபட்டுக்கிழிபட்டு இழி மொழி பட்டிருப்பதல்ல என்பதும் இயற்கைமொழி செயற்கைமொழி என்னும் இரண்டில் இயற்கைமொழி என்னும் பகுதியி லடங்கி எல்லா இலக்கணங்களும் அழகும் பொருந்தப் பண்டே அமைந்து புதிதாக ஒரு இலக்கணங் கற்பிததற்கு இடனின்றியும் உள்ள இலக்கணத்தைக் குறைக்க இடனின்றியும் நின்று நிலவுவது மதுர மணங் கமழும் நமது இனிய மதுரைத்தமிழே. இவ்வினிய தமிழின் அருமை பெருமை

இனிமை செம்மை திண்மை நன்மை முதலியவற்றை அறிய விரும்புவோர் இற்றைக்குச் சற்றேறக்குறைய நாலாயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு முன்னா ஏற்பட்ட தொல்காப்பியம் என்னும நூலை வாசிப்பரேல் அவர்களுக்கு இனிது புலப்படும். நமது தமிழ் மொழியினிடத்து நூல்கள் பெருகியிருந்தனவென்பதும் அவைகள் ஒவ்வொன்றும் வெற்று நூற்களாகாது பயன் மிகுந்த நன்னூற்களாகவே யிருந்தனவென்பதும் ஆராய்வாருக்குத் தெரியாமற்போகா. அவைகளிற் பல வடமேற்கிலிருந்து வந்த ஆரியர்கள் தம் ஆரியம் மேலாக வேண்டுமென நினைத்துத் தமிழ் நூற்களை மொழி பெயர்த்துத் தம்மதாக்கிக் கொண்டு தமிழ் நூற்களைச்சிதைக்குங் காரியத்திலேயே நின்றதன்மையாலும் புறநாட்டரசர் படை எடுத்து நமது நூற் பெருக்கங் கண்டு பொறாமை கொண்டு பல நூற்களை அழித்தமையாலும் உள்ளேயே ஏற்பட்ட மதக்கலகம் ஜாதிக்கலகம் முதலியவற்றாலும் போற்றுவாரின்மையாலும் பெரிதும் அழிந்து ஒரு சிறிதே எஞ்சி நிற்கின்றது. ஆதலின், தமிழ் நில மக்களே! நம் மொழியின் சிறப்பினைத் தெரிந்து உள்ளதும் போய் அழியாது போற்றிப் புகழ்பெறு மின்.

இதுவே தமிழ் நில மக்களையாம் அன்பொடு வேண்டிக் கொள்வது. இன்னும் பல எழுத நினைத்தாலும் இச் சஞ்சிகைக்கு இது பற்றி ஏற்பட்ட பக்கங்கள் முடிவுறுகின்றபடியால் நிறுத்தினோம். மற்றைச் சஞ்சிகைகளிலும் நமது தமிழ் சம்பந்தமாய் அதன் சிறப்புகள் வெளியாக்கிக்கொண்டு வருவோம்.

28—6—11. பத்திராதிபர்.

உ

# பெற்றோர் கடமை.

மக்களைப்பெற்று மகிழும் மாண்புடையீர்!

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

என்று தாயுமானப் பெருந்தகையார் கூறி யருளியபடி எல்லோருஞ் சுகமாக இருத்தலையே தன் சுகமாகக் கருதும் இயல்பினாலேயே பொது நலத்திற் கேற்ற பல வியாசங்களைச் "செந்தமிழ்ச் செல்வம்" வெளிப்படுத்தி வரும்.

அவ் வியாசங்கள் ஏற்றதும் நம்மவர் விரும்பத் தக்கதும் நம்மவர்க்குப் பயன் செய்யத்தக்கதுமாகவே இருக்குமென்று நினைக்கின்றேன், அதில் பொது நலப் பிரியனாகிய நானும் பெற்றோர் கடமை என்னும் விஷயத்தை எழுதுகின்றேன். உலகத் துதித்துள்ள ஒவ்வொரு பிராணியும் * பிள்ளைப் பேற்றை விரும்பாதன அல்ல. எல்லாம் பிள்ளைப் பேற்றை விரும்புவனவாகவே காணப்படுகின்றன.

இனி மக்கட் பிறப்புடைய நாமும் பிள்ளைப் பேற்றை மிக விரும்புகின்றோம்.

புதல்வனைப் பெற்றிருத்தல் மற்றெல்லாப் பேற்றினுஞ் சிறந்ததென வேதங்களெல்லாம் விளம்புகின்றன. இதன்றியும் புதல்வனைப்பெற்றவனே வீடடைதற்கு ( மோக்ஷம் ) உரியவனென்று வேதங்கள் முழங்குகின்றன.

இன்னும் மெய்யறிவு உடைய புலவர்களும் தமது அருமைத் திருவாக்கால் புத்திரப்பேறு மிகச் சிறந்ததெனக் கூறியிருக்கின்றனர்.

உதாரணமாகச் சில செய்யுள்களைக் கீழே வரைகின்றேன்.

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கை பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்." (நளவெண்பா.)

(பொருள்:— உண்ணும் பொழுது கிட்டிவந்து இனிய சோற்றை அளைகின்ற தாமரைப் பூவைப் போன்ற கைகளையும் பூவைப் போல் வாசனை வீசு

* பிள்ளை என்பது உயர்திணை அஃறிணைச் சீவன்களின் இளமைப்பெயர்.

கின்ற செவந்த வாயையுமுடைய புத்திரர்களை இவ்வுலகத்தில் பெருதவர் திரவியத்தை உடையவர்களானாலும் மற்றும் எதை உடையவர்களானாலும் உடையவர்களாவரோ? ஆகார் என்றதாம்.) எனவும்,

"மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி மைந்த
ரில்லா தவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னாம்" (வில்லிபாரதம்.)

(பொருள்:— வளப்பம் பொருந்திய புயத்தில் விளையாடும் மகிழ்ச்சியைத் தரத் தக்க புதல்வர்களைப் பெருதவர்க்கு மனை வாழ்க்கையில் என்ன இனிமை இருக்கின்றது என்றதாம்) எனவும்,

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே." (புறநானூறு.)

(கருத்து:— பெறுதற்கரிய செல்வங்களைப் பெற்றுப் பலரோடுண்ணும் செல்வர்களுக்குங் கூட குழந்தை விளையாட்டுகளாலுஞ் செயல்களாலும் மயக்கும் புதல்வர்களை இல்லாதார்க்கு அவர்தன் வாழ்நாள் பயனற்றதாகும்.) எனவுங் கூறியவற்றாற்றெளியப்படும்.

இன்னும் இவ்வண்ணம் புலவர்கள் புத்திரப் பேற்றைச் சிறப்பித்து மொழிந்துள்ள கவிப்பெருக்கத்தைக்கணக்கிடுவதென்றால்கணக்கிடற்கு அடங்காது மலிந்து கிடக்கின்றது. ஆதலின் மக்கட்கு எல்லாப்பேற்றினும் புத்திரப் பேறே சிறப்புடையதென்றும் கல்வி, செல்வம், புகழ் முதலிய வெல்லாம் பெற்ற ஒருவனுக்குப் புத்திரப் பேறில்லை யென்றால் அவைகளெல்லாம் பயனற்றதாகு மென்றும் புத்திரப் பேறே ஒருவனுக்கு முத்தி தருமென்றும் தெளிவாகத் தெரிகிறது.

இது தெரிந்தும் தெரியாதும் உள்ள எவரும் தமக்குப் புத்திரர்களிருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். புதல்வரைப் பெருதவர்கள் புதல்வனைப் பெற விரும்பி ஜெப தப விரதங்கள் செய்தும் கோயில் குளம் முதலிய இடங்களுக்குச் சென்றும் அன்ன தான முதலிய தானங்கள் செய்தும் சிலர் மருந்துகளையுண்டும் இன்னும் தம் புத்திக் கேற்றவாறு யுக்திகள் செய்தும் புத்திரனைப்பெற முயலுகின்றனர். இவைகளால் சிலர் தமதிஷ்டம் நிறைவேறப் பெறுகின்றனர். சிலர் எதனாலும் பயன் பெருது மனங் கலங்கி மாழ்கி யடிகின்றனர்.

அந்தோ பாவம்! பாவம்!! எத்தனை பேர் புத்திரப் பேறின்றி, என்னென்ன சொன்னான் கண்ணாளி, அவை யெல்லாஞ்செய்தான் புண்ணாளி" என்னும் பழமொழிப்படி எவரெவர் என்னென்ன சொல்லுகின்றார்களோ அவைகளை எல்லாம் செய்தும சித்திபெறாது நசித்துப்போகின்றனர்.

இது பெரும் பரிதாபம்! பரிதாபம்!!

இதனால் விளங்குவ தென்னவென்றால் பூர்வ புண்ணியப் பயன் இல்லாது போனால் பிள்ளைப்பேறு கிடைப்பது அரிது என்பதாம்.

ஆகையால் இப் பிறப்பிற் புத்திரப் பேறு பெற்றவர்களெல்லாம் முற் பிறப்பில் புண்ணியஞ் செய்துள்ள பாக்கிய முடையார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேலே புத்திரப் பேறு பெற்றவர்களெல்லாம் புண்ணிய வான்களென்றேன் அது கொண்டு மகிழ்தல் கூடா.

பிள்ளை என்றால் அணிப்பிள்ளை, கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை, தென்னம்பிள்ளையா? இல்லை. உத்தம குணங்களுடைய பிள்ளையையாம். உத்தம குணங்களையுடைய சற்புத்திரனைப் பெற்றவர்களே பாக்கியவான்கள். அவர்களே எல்லாம் பெற்றவர்களாவார்கள். இவர்க்கே முத்தியுண்டு.

துஷ்டப் பிள்ளையை, மட்டிப் பிள்ளையை அயோக்கியப் பிள்ளையைப் பெற்றிருப்பவர்கள் பெறாதிருப்பின் நலம் பெற்றிருப்பர். உள்ள செல்வமும் புகழும் புண்ணியமும் இவர்களைப் பெற்றதனால் இழந்து மீளா நரகத்திற்கு ஆளாகின்றனர். இப்படிப் பட்ட பிள்ளைகளைப் பெற்றிருத்தலினும் மேற்சொல்லிய அணிப்பிள்ளை, கீரிப்பிள்ளை, கிளிப்பிள்ளை, தென்னம்பிள்ளைகளைப் பெற்றிருப்பாரானால் சிறிதாயினும் பயனும் இன்பமுஞ் சித்தித்திருக்கும். ஆகாப் பிள்ளையைப் பெற்று அவதிப்படுவோர்கள் முற் பிறப்பில் மிகுந்த பாவஞ் செய்துள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

புண்ணியவான் என்று பேர் வாங்குவதில் எல்லாருக்கும் இஷ்டம், பாபி என்று பேர் வாங்குவதில் எல்லாருக்கும மனக் கஷ்டம்; என்றாலும் எல்லாரும் புண்ணியவான்களுமாயிருத்த லென்பதாவது எல்லாரும் பாபிகள் என்றிருத்தலாவது உலகவியற்கைக்கு மாறாக காணப்படுகிறது. ஏனெனில் உலகந்தோன்றிய காலத்திருந்து நடந்து வருங் கதைகளைக் கேட்கும் பொழுது எல்லாரும் புண்ணியவான்களாகவாவது எல்லாரும் பாபிகளாகவாவது இருந்ததாகச் சொல்லக் கேட்டதாக ஞாபகம் வரக் காணேன். அப்படியிருந்தால் உடனே உலகம் மாறுபாட்டை அடைந்துவிடும். எவ்வாறெனில் எல்லாரும் புண்ணியவான்களாக இருப்பின் மண்ணுலகம் பொன்னுலகமா

கவாவது அல்லது அதற்கு மேற்பட்ட ஏதாகவாகிலும் மாறவேண்டும். எல்லோரும் பாபிகளாக இருந்தால் உலகம் நரகலோகமாகவேண்டும் அல்லது அழிவுறவேண்டும். இவ்விரண்டும் ஆகாதிருப்பதால் புண்ணியவான்களையும் பாபிகளையும் கலந்தே உலகந் தன்னகத்தேகொண்டு இருக்கின்றதென்பது உண்மை.

இனி என்னைப் புண்ணியவான் என்று பிறர் சொல்லுவதால் எனக்கு என்ன லாபம் வந்து விடுகிறது என்னைப் பாபி என்று பிறர் சொல்லுவதால் என்ன நஷ்டம் வந்துவிடுகிறது என்று வாதிப்பாரும் உண்டு.

பாவம் புண்ணியம் ,நரகம் மோக்ஷம் என்பதில் நம்பிக்கை யில்லாதாரும் இருக்கலாம் அவர்களை இதில் நம்பிக்கை உண்டாக்கவேண்டு மென்பது இங்கு நமது கருத்தன்று, பின் னென்னெனின் புத்திரரைப் பெற்றோர் அப் புத்திரனால் தாம் புகழ் பெற்று மகிழ்ச்சியடைய வேண்டு மென்பதே.

தந்தை உலகம்மதித்துப்புகழும் சிறப்புகளுடையவராயும் உயர்ந்தகுலத்திற் பிறந்தவராயும் இருந்தாலும் பிள்ளை சற்புத்திரனகை இல்லாதபொழுது தந்தைக்கு மட்டுமன்று அக்குலத்திற்கே கெட்டபேர் வந்து சேருகின்றது.

ஆகையால் "மகனுரைக்கும் தந்தை நலத்தை" என்றும் "மகனறிவு தந்தையறிவு" என்றும் தாயைப் போலப் பிள்ளை நூலைப் போலச் சீலை என்றும் "ஆத்மா புத்திரன்" என்றும் வழங்கும் பழமொழிகளை நோக்கும் பொழுது தந்தைக்கு மகனாலேயே உயர்வும் தாழ்வும வருகின்ற தென்பது தெரிகின்றது. ஆகையால் தந்தை தன் புத்திரனை நல்வழியில் நடத்தி உலகம் புகழும் குணங்களிருக்கும்படிச் செய்து முன்னுக்குக் கொண்டு வருவானேல் இவனுக்குச் சிறப்புவரும். உலகில் எததனையோ கல்வி யறிவு ஒழுக்கம் இல்லாத பெற்றோர் தெய்வாதீனத்தால் சற்புத்திரரைப் பெற்று பெருமை யடைகின்றனர். ஆகையால் பெற்றோர் அவசியம் தம் பிள்ளைகள் குணஞ் செயல்களால் நல்லராய்ப் புண்புடையராய் இருக்கும்படிச் செய்யக் கடன் மைப் பட்டிருக்கின்றனர்.

சில பிள்ளைகள் இயற்கையிலே நல்ல குணங்களுடையராய் நல்வழியில் நடத்துவாரின்றிச்சேர்க்கை முதலியவற்றால் கெட்டுப் போகின்றனர்.

சில பிள்ளைகள் இயற்கையிற் றீக்குணமுடையராயிருந்தும் பெற்றோர் ஆசிரியர் முதலியவர்களின் கண்டிப்பினாலும் ஒழுங்காய் நடத்துதலாலும் நல்லவர்களாய் மாறி உலகிற் சிறந்து விளங்குகின்றார்கள். ஆயையால் தம்புத்திரர் இயற்கையில் நல்ல குணமுடையவராயிருந்தாலும் தீயகுணமுடையவராயிருந்தாலும் பெற்றோர் தம்பிள்ளைகளை ஆரம்பத்திருநது கவனித்து நல்லொழுக்கம் நற் பழக்கங்கள் வரும் படிக்கும் நல்லறிவு மிகும்படிக்கும் நல்லோர்

ளின் கூட்டுறவு ஏற்படும் படிக்குங் கவனித்து அவன் உலகில் மனிதனாக விளங்கும்படிச் செய்யவேண்டும். அவ்வாறன்றிப் பட்டினத்தடிகள் பகர்ந்துள்ளபடி.

"நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
  நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல் போலப்
  புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
  கவட்டுத் தொளை மரத்திடைக்கிற் காலைநுழைத்துக் கொண்டே
ஆப்பதனைப் பிடுங்கவசைத்த பேய்க்குரங்கு போல
  அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே."

(பொருள்:— நாவும் பிளக்கும்படிப் பொய்யைச் சொல்லி மிக்க திரவியத்தைத் தேடி நன்மை யொன்று மறியாத பெண்களைக் கூடி பூமி பிளக்கும்படி எழுகின்ற பூற்றீசலைப் போலப் புல புலவென்றும் கல கலவென்றும் பிள்ளைகளைப் பெறுவீர் காப்பதற்கும் வகையறியமாட்டீர் கைவிடவும் மாட்டீர் கவட்டை மரத்தில் காலை நுழைத்துக் கொண்டு ஆப்பைப் பிடுங்கிய குரங்கு போல அகப்பட்டுக் கொண்டீர் என்ன வகைப்பட்டீர் என்பதாம்.

என்றபடி யுழலாமல் "தந்தைமகற் காற்று முதவியவையத்து, முந்தியிருப்பச் செயல்." என்னும் பழமொழிப்படி தம் புதல்வரை நல் வழியில் நடாத்திக் கல்வியையும் நல்லொழுக்கத்தையுமுடையவர்களாக்கித்தன் குலத்திற்கும் தன் நாட்டிற்கும் பயன் பெருகச் செய்வாராக.

(இனி அடுத்த முறையில் எப்படித் தம்மக்களைத் தமக்கும் தம் நாட்டிற்கும் பயனுள்ளவர்களாக்கலாம் என்பதைப்பற்றி எழுதுகின்றேன்.)

29—6—11. போதுநலப்பிரியன்.

## பௌத்தமதம்.

### (முதற் பாகம்)

அதன் உற்பத்திக்குக் காரணம்:—

நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆசியா கண்டத்தின் தென் மேற்குப் பாகத்தில் வசித்துக்கொண்டிருந்த ஓர் ஜாதி ஜனங்கள் (Indo Aryans or

Indo-Europeans) அவ்விடமிருந்து கிளை கிளையாகப் பிரிந்து வெளிப்புறப் பட்டு நாலு திசைகளிலும் பரவி ஆங்காங்கே குடியேறி இப்பொழுது நாம் பூமியின்கண் பார்க்கின்ற பற்பல ஜாதிஜனங்களுக்கு (Nationalities) தாய்க் குடும்பினர்போல் ஆயினர், என்னும் விஷயம் 1911-வருஷத்தில் ஜீவிக்கும் நமக்கு ஒவ்வொருவர்க்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம்.

அப்பொழுது இந்தியாவின் வடபாகத்தில் இமையமலைக் கணவாய்களின் மார்க்கமாய் உட்புகுந்து குடியேறினவர்கள் தான் நமது முன்னோர்களான ஆரியர்கள். இவர்கள் சிந்து, கங்கை நதிகளால் நீர்வளம்பெற்ற வடநாட்டில் (Hindustan) குடியேற அவர்களுடைய நாகரீகமானது ஓங்கி வளர்ந்து புதுப்புதுப் புஷ்பங்களையுங் கனிகளையும் தரப்பெற்றது. அவைகளாவன. சுருக்கமாகப் பெரும்பான்மையும் நம் இந்தியர்களுக்குச் சொந்தமான விவசாயத்தொழிலும், நமது ராஜ்ய தந்திர வல்லமைக்கு சாக்ஷிபூதமான பூர்வகாலச்சிற்றரசுகளும், நமது மாசற்ற வேதத்தினால் காண்பிக்கப் பட்ட சுத்தமத மார்க்கமும் (Vedic Religion) நமது இப்பொழுது கெட்டுப் போயிருக்கின்ற வர்ணாஸ்ரம தர்மமுமேதான்.

இப்படிக்கு ஆரியர்களுடைய நாகரீகமென்கிற விஷயமானது மிக்க விஸ்தீரணமுடையதாயினும் நமது பௌத்தமத விஷயத்திற்கு ஆரியர்களுடைய மதசம்மந்தமான நாகரீகத்தைமட்டும் கவனிக்கப் போதும்.

ஆரியர்கள் இந்தியாவின் வடபாகத்தில் குடியேறிய காலத்தின் முன்பாகத்தில் ஆரியர்களுடைய மதம் மிகச்சுத்தமாயிருந்தது. அது இயற்கையில் அமைக்கப்பெற்ற பூமி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற பற்பல சக்திகளையும் அவைகளினால் மனிதனுக்கு உண்டாகும் அத்யந்த உபயோகத்தையும் கண்டறிந்துஅனுபவித்து மனிதன் மனதில் அவனறியாது ஜனிக்கும் சந்தோஷத்தை இவ்வகிலலோகத் தோற்றத்திற்குங் காரணமாயுங் கடவுளெனப் பெயர்பெற்றுமிருக்கும் பராபர வஸ்துவிற்குங் காண்பிக்கும் கருவியன்றிவேறில்லை. ஆதலால் ரிக்வேத வாக்கியங்களிலிருந்து தெரிகிறபடி நமது முன்னோர்களான ஆரியர்கள் இம்மத ஆசாரணையில் ஒன்றுகூடி ஆடிப்பாடி மேற்கண்ட அவர்களுடைய சந்தோஷத்தைக் காண்பித்து வந்தனர். அதே காலத்தில் ஓர் வகை ஔஷதத்தின் ரசத்தையும் ஆனந்தத்தில் பானஞ்செய்தார்கள்.

பின்னும் அசுவமேதயாகமென்கிற ஓர் வகையில் அவர்கள் குதிரையைக் கொன்று அதன் மாமிசத்தையும் உட்கொண்டார்கள். ஏனென்றால் அவர்கள் மாமிசாசிகள் இல்லை என்பதில்லை. வேதங்களும் அவைகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட உபநிஷத்துகளும் நமது முன்னோர்கள் பற்பல மாமிசத்தைப்புசித்ததாகக் கூறுகின்றன. இப்பொழுது பேசிவரும் காலத்தில் அவர்களுடைய சங்கத்தில் (Society) ஜாதி பேதமும் கிடையாது.

மேற் சொல்லிய மத நிலமை ஆரியர் இந்தியாவின் வடபாகத்தில் குடியேறிய முந்திய காலத்தியது. பின் காலத்திலோ அவர்களுடைய நாகரீகத்தில் பலவகை மாறுபாடுகள் ஏற்பட்டன நாடி வரையில் பற்பல சிற்றரசர்கள் ஆங்காங்கே தோன்றி ஜனங்களுக்கு மேன்மேலும் அபி விருத்தி ஏற்பட மதத்திற் கூறிய தர்மங்களையும், கர்மாக்களையும் செய்யவும், ராஜ்யங்களைக் காப்பாற்றுவதற்காகப் போர் புரியவும் வியாபாரம் விவசாயம் முதலிய தொழில்களை அனுசரிக்கவும், தனித்தனியே சிலர் தொடங்கினர். காலக்கிரமேண அவர்கள் வகுப்பு வகுப்புகளாகப் பிரிந்தனர். இப்படிச் சிறிது காலங் கழிய இவ்வகுப்புகளில் ஒவ்வொன்றும் தம் தம் ஆசார ஒழுக்கங்களினாலே பேதப்பட்டு முக்கியமான நான்கு வர்ணாஸ்ரமங்களுக்குக்காரணமாயிற்று. இதன்றி மததர்மங்களில் யாகாதிகள் விருத்தியடைந்தன. நாலு வேதங்களும் பூர்த்திபெற்று தனித்தனியே பள்ளிகளில் ஓதப்பட்டன. மனிதன் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு மாதமும் செய்யவேண்டிய யக்ஞ கிருத்தியங்கள் சங்கியைக் கெட்டாது விருத்தியாய் முன் கூறிய ஆரியருடைய மதத்தின் சுலபத்தையும், சுத்தத்தையும், மாற்றி மதமென்பதை மனிதர்களுக்கு ஒரு பெரிய பளுவாகச் செய்தன.

ஆரியர்கள் முன் இயற்கையினால் தங்களுக்கு ஏற்பட்ட நன்மையைக் குறித்து ஸ்வாமிக்கு வந்தனம் அளிக்கும்பொருட்டு துதிசெய்து வந்தார்களானால் இப்பொழுது ஸ்வாமி என்பதை ஒரு பூதத்துக்குச் சமமாய்க் கருதி அதன் தண்டனைகளினின்றும் நீங்குமாறு மத ஆசாரணைகளைச் செய்யத் தொடங்கினர். இது பற்றி அவர்கள் சிறிது காலத்தில் மதத்தின் உணர்ச்சியை மனதில் விட்டு விட்டு பெரும்பான்மையும் மதத்தைக் கிரியைகளினாலே மட்டும் கைக்கொண்டார்கள். இதுவுமன்றி வேதாத்தியயனஞ் செய்வதைச் சூத்திரர்களாகிய நான்காவது வகுப்பு ஜனங்களுக்குப் புகட்டுவதையும் நிறுத்திவிட்டு அதையே மோக்ஷ சாதன மென்றுங் கூறினார்கள். பின்னும் பிராமணர்கள் மட்டும் இவ்வகுப்புகளில் உயர்ந்தவர்களாகவும் மற்றவர்கள் தாழ்வாகளாகவும் பிராமணாகளுக்கே இன்னும சட்ட விஷயங்களில் ஓர் உயர்தியும் நாள் வரையில் ஏற்பட்டது இம்மாதிரி யெல்லாம் யக்ஞ, யாகாதி கிருத்தியங்களினாலே மதத்தின் உண்மையான தத்துவம மறைந்து அத்தத்துவத்திறகு விருததமான பிராணி வதைகளும், ஜாதி பேதங்களுமே அனுசரிக்கப்பட, மோக்ஷ சாதனமான சச்சரிதம் எனபதை கை நழுவ விட்டு தமது முன்னோர்கள் மதததின் கிரியை ரூபமான சின்னத்தை மடடும் பெரிதென்று கொண்டாடி வந்தனர். இப்படி மத தத்துவத்தினின்றும் நழுவும் ஜனஙகளைச்சிறந்த புத்திமானாகிய ஜனகமகாராஜா முதலியவர்கள் பார்வையுற்று யக்ஞ யாசகங்களைக்கண்டனஞ் செய்யுமாறும், லோகத்துக்கு காரண பூதமான ஒரு கடவுளை, தியானத்தினாலும், சச்சரிதத்தினாலும், அடையலாம என்றும் மனிதர்கள் தங்கள் தங்கள ஆத்மா முக்தியடையும் அளவும், பிறந்து இறக்கின்றார்கள் என்றும் உயர்ந்த நியாயத்தை நிலை நிறுத்தும் பொருட்டுமே சிறந்த நூல்களான உப நிஷத்துகளைச் செய்யலாயினர்.

பின்னும் கபிலர் என்பவரும் ஆரிய மதத்தில் ஏற்பட்டிருக்கும் தீங்குகளைச் சகியாது அவர் தத்துவத்தையும் (Sankya philosophy) பிரசங்கித்து வந்து இருந்தனர். கபிலர் வேதங்களையும், வேதங்களினால் நிதர்சிக்கப்பட்ட யக்ஞ யாகாதிகளையும் நிந்தித்து பிறப்பு இறப்பு நியாயத்தை மட்டுமே நம்பி; நன்மார்க்கமிருந்து அகலும் ஜனங்களைத்திருப்ப முயற்சி செய்தார்.

இப்படி ஆரியர்கள் இந்தியாவின் கண் குடியேறி பல நூற்றாண்டுகள் செல்ல அவர்களுடைய மதமென்னும் நிர்மலமான ஆகாயத்தில் யக்ஞயாகங்கள் போன்ற கிருமைகளாகிய இருண்ட மேகங்கள் வியாபிக்கவும் அங்கங்கே சிற்சில ஜனகர் கபிலர் போன்ற ஒளிகள் தோன்றவும் இத்தகைய காலத்தில் ஓர் பெரிய ஒளிகள் தோன்ற மேற்கண்ட மேகங்கள் நாலு திசைகளிலும் செல்ல இப்பூமி யடங்கலும் திவ்விய ஞானமென்னும் ஓர் பேரொளியில் முழுகிற்று.

மகா ஞானியாகிய பௌத்தர் பிறந்தனர். அவர் பிறந்த காலத்து மதத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை சீர் திருத்தஞ் செய்வதற்கேற்ற திவ்ய ஞானத்தை அடைவதற்கு அர்ஹமான மனோ புத்தி சரீரம் இவைகளோடு கூடிப் பிறந்திருக்கும் பௌத்தரை அவருக்கு முன்னால் காண்பிக்கப்பட்ட உப நிஷத்துக்களென்ன, கபிலநியாயமென்ன இவைகள் பௌத்தர் மனதிற்குத் தகுந்த அமிர்தம்போன்ற உணவைப் புகட்டி அவர் சென்ற மார்க்கத்தில் அவரை லோகத்தின் நன்மைக்காக நடப்பித்தன.

(இன்னும் வரும்)

S. திருவேங்கடாச்சாரியார், B. A.,
*S. P. G High School,*
Trichinopoly.

## மகா கொடியது.

கடல் சூழ்ந்த இவ்வையகத்து மிகச் சிலர் சதா ஆநந்தத்தில் மூழ்கி சுகமடையப் பெரும் பாலர் நாள்தோறும் ஆருத்துயரால் மனம் புண்ணாகி சீவில் கிருமனல் வியாஜியங்களில் சம்மந்தப்பட்டு உடுக்க உடையும் உண்ண உணவுமின்றிக் கடையில் யாசகர்களாகி வயது சென்ற முதுமையிலாலோ அல்லது தற்கொலை புரிந்தோ மாண்டுபோகிறவர்களை நாம் பார்த்தும் கேட்டுமிருக்கின்றோம். அந்தோ! என்ன பரிதாபம். நாமன்னோரின் கஷ்டங்களைக் கண்ணுற்று மனங்கசியு முன்னர் இவர்கட் கிவ்வாருன தீங்கு நேரந்த காரணத்தைச் சிந்தித்தறிந்து. "எதிரதாக் காக்கு மறிவினார்க்கில்லை யதிர வருவதோர் நோய்"என்றவாறு நம்மைநாமேகாத்துக்கொள்வதுவே நமது கடமையாகும்.

உலகில் ஒவ்வொரு குடும்பத்திலும் இயல்பாக நேரிடும் இடுக்கண்கள் பற்பலவே யெனினும் அவற்றுள் மிக உக்கிரமானது மகா கொடியது எனத் தலைப்பெயருடன் வியாசம் எழுதப் புகுந்த பிறர் பாற் சொள்ளுங்கடனேயாகும். இக்கடனென்னுங் கடலிற்றள்ளி நம்மின் சுயாதீனத்தை யழித்துவிடும் நதிகளாகிய குடி, சூது, விபசாரம், டம்பம், வீண் பெருமை வரம்பு, கடந்து செலவிடல் சோம்பல், மூடலியவைகளை நீக்கி வாழ்வதே அழகு. அதுவுமன்றி

"ஆன முதலி லதிகஞ் செலவானான்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாயேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு." என்றபடி வருவாய்க்கு

மேல் செலவிட்டு மேற் கூறிய துன்பங்களுக் குள்ளாவது பெரும் பேதமையன்றோ? சிலர் பணம் கிடைத்தவளவில் (இன்றைக் கிருப்பார் நாளைக்கில்லை நாம் இறப்பின் என்ன கொண்டு போகின்றோம். பிற் காலத்திற்கு நமக்கும் நம்மக்களுக்கும் நாமென்ன சேர்த்து வைப்பது. மேயப்போகின்ற பசு தன் கொம்பில் புல் கொண்டா போகின்றது) எனப் பலவாறாக முற்றத்துறந்த முனிவர்களைப்போல் சமயத்திற்குத்தக்கவாறு பேசித்தாசி, வேசி, குடி, சூது, நாடகம் இவைகளை நாடிச்சென்று செலவு செய்து பொருளையழிக்கின்றனர். பலர் சம்பளம் பெற்ற பத்துப் பதினைந்து தினத்துக்குள்ளேயே கண்டபடி கண்மூடிச் செலவிட்டு மீதியாகிய பதினைந்து தினத்திற்கு அண்டை அயலாரிடம் வாயையும் பல்லையுங் காட்டி வட்டிக்கு அஞ்சாத மட்டிகளைப்போல் கடன் வாங்கி (மிகத் தன முடையவர்) செலவிடுவதைப் போர்முரங்களும் செலவு செய்கின்றனர். அநேகர் வீடுகளில் பெண்பாலர்கள் தங்கள் நாயகர்களின் வருமானம் அந்தஸ்து இவைகளைக் கவனியாது தின் பண்டங்களிலும் ஆடைகளிலுஞ் செலவழிக்கிறார்கள். மற்றுஞ் சிலர் நெற்றி நீர் நிலத்தில் விழும்படியாக உழைத்துப் பசியோடு வரும் நாயகர்களை அன்போடணைத்துக்களைப்புத்திரும்படியாக உபசரணை செய்யாது சுகமாய் இருக்கும் தங்களுக்கு நல்ல ஆடை ஆபரணங்கள் அண்டை வீட்டாரைப் போலில்லை என்று சண்டை சச்சரவு செய்து கடன் உடன் வாங்கியாவது அவர்களின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யச் சொல்லுகிறார்கள். (பெண் மக்கள் நாயகர்களை இவ்வாறு நடத்துவதற்கு அவர்கள் கல்வி கற்காமலிருப்பதுவே ஒரு முக்கிய காரணமாகின்றதல்லவா?) வயது முதிர்ந்தவர்களே பலவாறு கண் மூடிக்கொண்டு செல விடுகையில் சிறு பிள்ளைகளையும் மாணாக்கர்களையும் கேள்ப்பானேன். ("தொட்டிற் பழக்கஞ் சுடுகாடு மட்டு மென்னும்" பழமொழியைக் கவனித்துச் சிறுமியர் சிறுவர்கள் அதிக செலவு செய்யாது செட்டாய் இருக்கும்படி வளர்க்கவேண்டியது பெற்றோர்களின் கடமை யாகும்.) மேற் கூறியவர்களில் சிலர் பலரிடத்தில் கடன்வாங்கிப்பள்ளத்திற் புதைத்துவைத்தோ அல்லது வீண் செலவு செய்தோ சில நாட் பின்னர் வாங்கின கடனைக்கொடுக்க வகையில்லையெனச் சற்றும் நாணமுறாது "இன்சால்வென்ஸி"

சீட்டுப் பெற்று கடன் கொடுத்தவர்களின் வாயில் கடுக்காய் வைக்கிறார்கள். மற்றுஞ் சிலர் கொடுத்த காசைக் கேட்க வந்தால் வைகிறது போதாமல் நையப் புடைத்து அனுப்புகின்றனர். ஆ! ஆ!! கடன் கொடுத்தவர்களின் வயிறு எவ்வாறெரியும். இவர்களைப் பொய்யர்களென்றும் வஞ்சகர்களென்றும் உரைக்கநாவஞ்சுமோ? இவர்கள் கடன்கேட்கும்போது என்ன மரியாதை என்ன அடக்கம் அவைகளெல்லாம இப்போ தெவ்கே? பெரும்பகுதியார் தங்களுக்கு உபகாரத்திற்காகக்கூட்டுக் கையொப்ப மிட்டவர்களைக் காண்பித்துவிட்டு புதுவை காரைக்கால போய் விடுகிறார்கள். ஐயோ! இவர்கள் கடன் கொடுத்தவர்களின் கூத்திப் பிள்ளைகளோ? தத்துப் பிள்ளைகளோ? அல்லது சொந்தப் பிள்ளைகளோ? அறிகிலோம்.

எடுத்த வியாசத்தைச் சுருக்கி முடிக்க வேண்டியிருத்தலால் கடன்படுவோர்களின் முடிவான கதி என்ன தானென்று சற்றுப்பார்ப்போம். கடன் கொடுத்தவர்கள் குறித்த காலம் தவறிவிடின் கடன் காரர்களை மான மறியாதையின்றித் தங்கள் அடிமைகளைப் போல் பாவித்து கடனைத் தீர்க்கும்படிப் பேசுகிறார்கள். ஆ! ஆ!! இவர்கள் தங்களினது ஆண்மைத் தனத்தை தாங்களே இழந்து வெட்கித்தலை குனிந்து, "வேலைக்குப்போகவில்லை அங்கிருந்து பணம் நாளைக்கு வரும் இம்மாதம் வீட்டில் கொஞ்சம் கஷ்டம் சீட்டு விழவில்லை" எனப் பலவாறு பொய் பேசி நாள் வாரம் மாதம் வருடம் போக்கப்பார்க்கின்றனர். ஆயினும், காசுக்கு எட்டுச் சட்டி வாங்கிச் சட்டி ஒன்று எட்டுக் காசுக்கு விற்றாலும் நமது வட்டிக் குக்கட்டாதென்று பண லேவாதேவி செய்கிறவர்கள் சொல்லுவதுண்டு, சிலர் கோபங்கொண்டு பொறுத்தது போதுமென்று கோர்ட்டில் வியாஜியம் செய்யக் கடன்காரர்கள் கோர்ட்டில் கால் தேய்த்துக் கை கட்டி நின்று வாயையும் பல்லையும் காட்டி மாதம் 5 அல்லது 10 ரூபாய் தருவதாகச் சேட்டிக் கொள்ளுகிறார்கள். தவறினால் தங்கள் வீட்டிலுள்ள தட்டுமுட்டு சாமான்களையும் வீடுவாசல்களையும் ஜப்திசெய்ய விட்டு ஓட்டாண்டிகளாகிறார்கள். சிலர் சிறைச்சாலைக்கும் போகிறார்கள். ஓகோ! கடனின் கொடுமையைப் பார்த்தீர்களா "கடன்படவாழாமை காண்டலினிதே" என்னும் முது மொழிக்கொப்ப கடன்படாமலிருக்கும் மார்க்கங்களைக் கூறி வியாசத்தை முடிவுக்குக்கொண்டு வரலாம். ஒரு பொருளை வாங்குமுன் அப்பொருள் நமக்குமுக்கியமா? நாம் வாங்குவதற்கு தகுதியா? அப்பொருள் இல்லாது இருத்தல் கூடாதா? தற்காலத்திற்கு வேண்டியதவசியமா? என யோசித்தே வாங்கவேண்டும். நமக்கு வேண்டாப் பொருள் சகாயமாகக் கிடைத்தபோதும் அதை அடையக்கூடாது. கடனைத் தீர்க்கும் மார்க்கமிருந்தாலன்றி கடன்வாங்கப்படாது. வீணாக ஆடைஆபரணங்களில் ஆசைவைக்கலாகாது. புருஷரும் பெண்டிரும் ஒத்துச் செட்டாய்செலவிட வேண்டும். செய்யும்செலவுகளை எழுதிவைத்துச் சில மாதங்களுக்குப்பிறகு அவைகளைப் பார்த்தால் நாம் வீணில் செலவழித்ததும் செலவழியாததும் நமக்கே புலப்படும் ஒரு பொருளைக் கடனுக்குவாங்க முயன்றால் நமது இச்சைபோல் நல்ல

பொருளைத் தெரிந்தெடுக்கவும் நயமான கிரயத்துக்குக் கொள்ளவும் கூடாமல் போகிறது இவற்றால் நமக்கு நஷ்டமே ஒழிய இலாபமில்லையாது. கையில் பணங் கொடுத்தே பொருள் பெறவேண்டும். குடி, சூது, விபசாரம் டம்பம இவைகளை நீக்கவேண்டும். இவைகளை எல்லாம் அனுசரித்து நடக்கிறவர்கள் கடன் பட்டுக் கஷ்டப் படாமல் சுகமடைவார்களென்பது திண்ணம்.

*Kothavalchavadi.*
3—7—11. Trichy. J. S. நரசிம்மலு நாயுடு.

உ

# மங்கைக்கரசி

அல்லது

# மாண்புடைமனைவி.

## ஒரு இனிய தமிழ்ப் புதின நாவல்.

*காப்பு.*

மங்கையர்க் கரசி என்னும் மாண்புடை மனைவி காதை
பொங்குநீ நுலகில் நாவற் புதுப்பெயர் கொடுத்துக் கூற
எங்குலத் தெய்வ மாகும் எழிற்கரி முகத்துக் கோவின்
துங்கநற் பாதப் போதே தோன்றிடும் வந்திப் போதே.

*தற்சிறப்புப்பாயிரம்*

மலர்நிலத் துதித்த மக்கள் மகிழ்ச்சியாற் சிறக்க வென்றே
பலர்நமைக் கேட்ட பண்பாற் பாவையர் கற்பின் மேன்மை
உலர்தரா துணர்ந்து கொள்ள உயர்தரு குலத்து வந்த
அலர்நிகர் முகத்து மங்கைக் கரசியின் காதை சொல்வாம்.

*அவையடக்கம்*

நாவலேன் றநுஞ் சொல்லும் நயனுணர்ந் ததனைச் சொல்ல
ஆவலேன் னுளத்திற் றேன்ற அறிவிலே னெனினுங் குற்றம்
மேவரு பெரியோர் காணார் மிக்கன கண்டு கொள்வார்
ஓவறத் தொடங்க லாமென் றுரைசெயத் துணிந்தேன் யானே.

# பீடிகை:

*"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்."

உலகில் மிக எளிதில் சிரமமின்றிச் செய்யக் கூடியதும் தக்க பயனைத் தரக்கூடியதும் இல்லறமே என்று நல்லோரும் நூல்வல்லோருங் கூறியிருக்கின்றார்கள்.

ஆகையால், எல்லோரும் இல்லறத்தை விரும்புவது மிகவும் நல்ல காரியமே. நாம் எவர்களைப் பார்த்தாலும் இல்லறத்திலிருப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

துறவறத்திலிருப்பவர்களைக் காண்பது இக் காலத்தில் மிக அருமையினும் அருமையே.

இல்லறத்திலிருப்பவர்களோ விண் மீன் போலவும் எண்ணிக்கைக்கடங்காது மிகுந்திருந்த போதிலும் அவ் இல்லறத்தைக் கவனித்து அவ்வறத்திற் கூறியபடி நடப்பவர்களோ மிகச் சிலரே.

இதற்குக் காரணம் இல்லற தர்மத்தை மிகச் செம்மையாக அறியாதிருப்பதுவே தான். இல்லற தர்மத்தை மிகச் செம்மையாக அறிந்தவர்களுக்கும் இல்லறத்தில் சொல்லிய அறப்படி நடத்தற்கியலாது இடர்ப்படுவதையுங் கண்டிருக்கலாம், இதற்குக் காரணம் இல்லறத்திற் குரிய மனைவி முதலிய உதவிகள் ஏற்ற வாறமையாதிருப்பதே காரணமாம்.

புருஷனும் பெண் ஜாதியும் கருத்தொத்து நடந்தா லொழிய இல்லறம் சரிவர நடை பெறுவது அசாத்தியமாம்.

---

(திருக்குறள்)

* ஒருவன் இல்வாழ்க்கையைத் தரும வழியாக நடத்துவானாகில் துறவறத்திற் போய்ப் பெறும் பயன் என்ன? ஒன்று மில்லை என்பது பொருள்.

இல்வாழ்க்கையில் தரும வழியாவது பழி யஞ்சிப் பகுத் துண்ணுதலும் அன்புடைமையுமென முற் குறள்களால சொல்லப்பட்ட வழிகளாம.

புறத்தாறு எனபது மனைவியை விட்டு வனத்திலே செல்லு நிலை.

ஈங்கு; மனைவியை விட்டு வனத்திலே சென்று துறவறத்தில் நின்றார் பெறும பயன்களை எல்லாம் தரும வழியாக இல்லறத்தை நடத்துவனேல் பெறுவன் என்பதாம. இது பற்றியே தான் தெய்வப் புலமை ஔவையாரும் தமது தெய்வத்திருவாக்கால் "இல்லற மல்லது நல்லற மன்று" என்று கூறியுள்ளார்.

நமது நாட்டில் பல நல்ல வழக்கங்கள் நம் முன்னோர்களால் இல்லறத்திற்குச் சாதகமாக ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அதன் பொருளை யுணராமையால் அதைக் கை நழுவவிட்டு மயங்கித் தவிக்கின்றனர்.

பெற்றோர் விவேகக்குறைவால் தம் பெண்ணிற்கு விருப்பமில்லாத ஒருவனுக்கு அவன் சம்மதத்தை விசாரிக்காமலும் விசாரிக்க வேண்டுமென்னும் எண்ணமில்லாமலுமே தம் பெண்ணைக் கொடுத்து தம் பெண்ணைச் சாகும் வரை சஞ்சலத்துக்குள்ளாக்குகின்றனர்.

இதே விதமாக ஒருவனுக்கு அவன் பெற்றோர் அவன் விருப்பத்தைச் சிறிதும் கவனியாது அவனுக்குச் சிறிதும் விருப்பமில்லாத பெண்ணைக் கல்யாணம் செய்துவித்து அவனுக்குத் துன்பத்தை யுண்டாக்கி அவனைப் பாழ் செய்து விடுகின்றனர். இவ்விதமாக மூடப் பிதா மாதாக்கள் செய்வதால் விளையுங் கேடு ஏட்டிலடங்காது. எண்ணிமுடியாது.

இது போதாதென்று ஒரு பெண்ணுக்கு மாமியும் நாத்தியும் எமன் காலன் போல் ஏற்பட்டுவிடுகின்றார்கள். அவர்கள் பால் அகப்பட்ட பெண் எமன் கையில் அகப்பட்டிருந்தாலும் சுகமாயிருந்திருக்குமென்று சொல்லும்படி பல பாடும் பட்டு பயனின்றி மடிகின்றனள்.

நமது நாட்டில் இல்லறத்தை நடாத்தும் தலைவன் தலைவிகள் பெறும் சுக துக்கங்களையும், கஷ்ட நஷ்டங்களையும் வெகு தெளிவாகக் காட்டுமாறு நான் சில புதுமைக் கதைகளைத் திரட்டி நாவலாக எழுதுகின்றேன். இது நமது நாட்டு ஆண் பாலார் பெண்பாலாரென்னும் இருபாலார்க்கும்பயனுள்ளதாயும் களிப்பைத்தருவதாயும் இருக்குமென்றே நினைத்துஎழுதுகின்றேன்.

உ

## முதல் அத்தியாயம்.

*" கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்."

ஒருநாள் மாலை நானும் என் சிநேகிதர்களும் வேடிக்கையாக உலாவுதற் பொருட்டு தெப்பக் குளத்து ரோட்டிலிருந்து காவிரியாற்றின் பாலத்தை

---

* (திருக்குறள்) மெய்யறிவுடைய கடவுளை வணங்காராகில் கற்றதனாற் பயனில்லை என்பது பொருளாம். ஆகம அறிவுக்குப் பயன் அவனடிகளை வணங்கிப் பிறவியை அறுத்தலென்பது இதனால் சொல்லப்பட்டது.

நாடிச் சென்று கொண்டிருந்தோம். அன்று வெள்ளிக்கிழமையாக இருந்தபடியால் திரள் திரளாக ஜனங்கள் திருவானைக் காவலை நாடிச்சென்று கொண்டிருந்தார்கள். இச் சம்பவம் நிகழ்வது திரிசிரபுரத்தில் என்பது அன்பர்களுக்கு இனி விளங்காமற் போகாது என்று நினைக்கின்றேன். திருவானைக்காவில் ஜம்புகேசுவரர் ஆலயத்தில் அகிலாண்டேசுவரி சன்னிதானத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மிகுந்த கூட்டமிருக்கும். எந்தக் கோவிலிலும் அம்மன் சந்நிதானத்தில் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் எப்பொழுதும் விசேஷமாகவே யிருக்கும். ஆனால் நமது திரிசிரபுரத்தில் ஆனை பூசித்து முத்திபெற்ற தலமாகிய திருவானைக்காவில் வெள்ளை நாவலின் கீழ் ஆன்மாக்களுய்தற் பொருட்டு முளைத்தோங்கி யருளும் ஜோதியாகிய ஜம்புகேசுவரர் திருக்கோயிலில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சந்நிதானத்தில் மற்றத் தலங்கள்போல செவ்வாயும் வெள்ளியும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டாலும் வெள்ளிக் கிழமையே அதி விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. பிரதி வெள்ளிக் கிழமையும் மாலையில் திருவானைக்காவிற்குச் செல்லும் பாதையில் கூட்டங் கூட்டமாக ஜனங்கள் சென்று கொண்டிருப்பார்கள். சாதாரணமாக ஜனங்கள் நடந்து செல்வார்கள். செல்வவான்களாயுள்ளவர்கள் வண்டிகளிற் செல்வார்கள். குதிரை வண்டிக் காரர்களுக்கு இந்நாள் மிகக் கொண்டாட்டமான நாள்.

அவர்கள் அதி உற்சாகத்துடனும் குதூகலத்துடனும் பாட்டைப் பாடிக்கொண்டு குதிரையை விரைவாகச் செல்லும்படித் தட்டி விட்டு "ஹேய், ஹேய்" "எட்டிப்போ! எட்டிப்போ!!" "ஒத்திப்போ! ஒத்திப்போ!!" என்று சொல்லிக்கொண்டும் கட கடவென மட மடவெனத் தன் வண்டியை விரட்டிக் கொண்டு செல்வார்கள். திரள் திரளாகச் செல்லும் ஜனங்களோ இவ் வண்டிக்காரர்களின் சத்தத்தையும் வண்டி வரும் சப்தத்தையும் கேட்டு ஒருவர்மேல் ஒருவர் விழுந்தும் விழுந்தும் ஓடியும் ஒதுங்கி நின்று நின்று சென்று கொண்டிருப்பார்கள்.

விடர்கள் வேடிக்கை பார்த்தற் பொருட்டு விநோதமான உடைகள் உடுத்துக்கொண்டும் பிறர் கண் தன் மேல் விழத் தக்கதாக அலங்கரித்துக் கொண்டும் வெள்ளிப் பிடியுடைய பிரம்பு முதலிய கையி லெடுத்துக்கொண்டும் தமது சிநேகிதர்களுடன் கூடி வேடிக்கையுடன் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் வழியிற் செல்லும் பெண்களையும் ஆடவர்களையும் பற்றித் தமக்குள் ஒருவர்க் கொருவர் காட்டிக்கொண்டும் அவர்கள் சம்மந்தமாய் கேலியாகவும் விளையாட்டாகவும் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் சென்று கொண்டிருப்பார்கள்.

கலாசாலை மாணாக்கர்கள் ஆங்கிலத்தில் சம்பாஷித்துக்கொண்டும் தமக்குள்ளே ஒரு விஷயத்தைப் பற்றித் தர்க்கித்துக்கொண்டும் தமது ஆசிரியர்

கள் ஒவ்வொருவரின் வன்மையைப்பற்றிப் பேசிக்கொண்டும் தமது சொந்த ஊரின் சிறப்புக்களையும் தாம் கண்ட விநோதங்களையும் பற்றிப் பேசிக்கொண்டும் விரைந்து நடந்து கொண்டிருப்பார்கள். பத்திமான்கள் மிகச் சுத்தியுடன் தனித்து ஒதுங்கி ஒதுங்கிச் சிலர் தோத்திரப்பாக்களைப் பாடிக்கொண்டும் சிலர் சிவ நாமத்தை உச்சரித்துக் கொண்டும் சிலர் தம்முடன் வருபவர்களுக்கு திருவானைக்காவலின் மகிமையைக் கூறிக்கொண்டும் செல்வார்கள்.

ஒருவன் திருவானைக்காவுக்குச் செல்லும் ஒருபாதையில் நின்றுகொண்டால் ஒரு வெள்ளிக் கிழமை மாலைக்குள்ளேயே உலக முழுமையையும் தெரிந்து கொள்வன், நன் ஞான முணர்ந்துகொள்வன் என்பதற்குச் சிறிதும் ஐயமேயில்லை.

நிற்க; நாங்கள் காவிரியாற்றுப் பாலத்து வரையும் சென்று கிழக்கு ரோட்டு வழியாகத் திரும்பிச் சின்னக் கடைத்தெருவின் வழியாகத் திரும்பிவிட நினைத்துப் புறப்பட்டோம். நாங்கள் காவிரியாற்றுப் பாலத் தண்டை வந்ததும் ரஸ்தாவிற்குச் சற்றுஎட்டிக்கூட்டங்கள் எங்கள்மேல் வந்துவிழக்கூடாத ஒரு இடத்தில் நின்று சில விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டு சிறிது நேரம் நின்றோம். நாங்கள் பேசிய விஷயம் சில ஆராய்ச்சி சம்பந்தமாயும் அருமையான விஷயமாயும் இருந்தாலும் எங்கள் கண்கள் வழியில் போய்க் கொண்டிருப்போர் வந்து கொண்டிருப்போர்களையும் அடிக்கடி கவனித்துக் கொண்டிருந்தன. அப்படியிருக்கும் பொழுது இரட்டை மாடுகள் கட்டிய ஒரு பெரிய பெட்டி வண்டியில் ஒரு சுந்தரவடிவுள்ள மாதும் ஒரு புருஷரும் மற்றொரு பெண்ணும உட்கார்ந்திருக்க வண்டி விரைவிற் செல்லுதற்கு முடியாதபடி கூட்டமாக இருந்தபடியால் மெதுவாகச் சென்று கொண்டிருந்தது.

எங்கள் எல்லோருடைய கண்களும் அந்த இரட்டை மாட்டு வண்டியின் மேற் பாய்ந்தது, இந்த வண்டிக்குள் இருப்பவர்கள் யாரெனக் கவனிக்க விரும்பினோம். நாங்கள் கவனித்த மட்டில் அதில் இருந்த புருஷர் தக்க சீமானாகவும கல்வி மானாகவும் இருக்கக் கூடுமென்று நினைத்தோம். அவர் திரிசிரபுரத்துக்குப் புதிதாக வந்தவரென்றும் புலப்பட்டது. நாங்கள் அவருக்கு 55 வயதிருக்குமென்று மதித்தோம்.

அவரோடு கூட இருந்த பெண் பட்டினத்துப் பாங்காக உடைகளை உடுத்துக்கொண்டு தக்க நகைகளை அணிந்துகொண்டும் விளங்கினாள். அவள் காண்பவரின் கண்ணைக் கவரும் வனப்புடையளாக விருந்தாள். அவளுக்கு 30 வயதிருக்குமென்று நினைத்தோம். இவர்கள் கூட இருந்த மற்றொரு பெண் உடையாலும் நிலையாலும் இவர்களின் வேலைக்காரியா யிருக்குமென்று நினைத்தோம். இம்மட்டும் இவர்களைக் கவனித்த மட்டில் இவர்கள் யார்?

எந்த ஊர்? இங்கு எங்கே வந்திறங்கி யிருக்கிறார்கள்? இவர்கள் வந்த நோக்கமென்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்பது என் மனத்தில் உதித்தது. என்னுடன் வந்த மற்றவர்களுக்கும் உதித்திருக்கலாம், ஆனால், அவர்களுக்குப் பல முக்கியமான வேலைகள் இருந்தபடியால் அவர்களுக்கு இவைகளைத் தெரிந்து கொள்ள நேரமில்லை அது விஷயமாகத் தமது காலத்தையும் முயற்சியையுஞ் செலுத்துவது வீணென்று நினைத்தே விட்டு விட்டனர் என்று நினைக்கின்றேன்.

எனக்கோ உலகில் பலருடைய குணங்களையும் செயலையும் கவனித்து அவர்கள் குணஞ் செயல்களின் குறை குணங்களை யறிந்து கொண்டு தேய நன்மை கருதிப் பொதுப் பிரசங்கங்கள் செய்வதையும் வியாசங்கள் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்துவதையும் விரதமாகக்கொண்டுள்ளே னாதலால் அவர்களைப் பற்றி என்னென்ன தெரிந்து கொள்ளலாமென்றும் இவர்கள் சரிதம் கேட்பவர்க்கு மிக விந்தையாயு மிருக்குமென்றும் இவர் சரித்திரத்தைத் தெரிந்து வெளிப்படுத்துவதால் நமது நாட்டிற்குப் பல நன்மைகள் விளையும் என்றும் எனது உள்ளத்தில் உதித்தது.

(இன்னும் வரும்) கதாப்பிரியன்.

## புத்தக வரவுகள்.

**ஸங்கீதஸ்வரப்பிரகாசினி:-** இது ஒரு அருமையான சங்கீத நூலாகவே காணுகின்றது.

இது நமது சமய குரவர்களால் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற தேவார திருவாசகங்களிற் சில வற்றிற்கும் மற்றுமுள்ள பக்திமான்களால் பாடப் பெற்ற அருமைப் பாக்கள்சிலவற்றிற்கும் சங்கீதரூபமாய் ஸ்வரப்படுத்தி எழுதப் பெற்று ஆர்மோனியம், பிடில், வீணை முதலான வாத்தியங்கள் வாசிக்கும் பழக்கமுடையோர்கள் பிறர் உதவியின்றித் தாங்களே இலேசாகக் கற்றுக்கொள்ளத் தக்கதாயிருக்கிறது. இதனைத் திருநெல்வேலி மேல மாடத் தெரு சங்கீத வித்துவான் மகா-௱-௱-ஸ்ரீ T. S. அப்பாசாமி ஐயரவர்கள் இயற்றியிருக்கின்றார்கள். இவர் எடுத்துக்கொண்ட பிரயாசம் கொண்டாடத்தக்கதே. இது பலருக்கும் பயன் படுமாறு மெச்சத்தகுந்த வண்ணமாக அச்சுவியானத்தி லேற்றி யுலாவுவித்த திருநெல்வேலி சாமி சங்கிலி புத்தகசாலைத் தலைவர் மகா-௱-௱-ஸ்ரீ T. V. வெங்கடேஸ்வர ஐயர் அவர்களின் உபகாரமும் பாராட்டற்பாலதே. இதன் விலை அணா 5.

ஆரியமத உபாக்யானம்:—இப் பெயர்கொண்ட புத்தகத்தின் முதற்பாகம் ஒன்று சென்னை "ஜனரல் சப்ளைஸ் கம்பேனி" மகா-ள-ள-ஸ்ரீ V. குப்புசாமி ஐயர் அவர்களால் கிடைக்கப் பெற்றேன். இது ஒரு சிறந்த வசன நடைப் புத்தகம். செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இதில் ஆரிய மத சம்மந்தமான பல அரும் பெரும விஷயங்கள் அமைக்கப் பெற்றிருக்கிறது. இது மாணுக்கர்களுக்கு வசன பாடமாக வைக்கத்தக்கதே. இதனைத் திருநெல்வேலி மகா-ள-ள-ஸ்ரீ ஏ. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் இயற்றியிருக்கின்றார்கள். இவர் மதாபிமானமும் பாஷாபிமானமும் தேசாபிமானமும் உலகத்தாரால் விரும்பத்தக்கதே இதுபோலும் பல சிறந்தநூற்களை இயற்றி வெளிப்படுத்தி நமது நாட்டிற்கு நன்மை செய்யுமாறு இவர்க்கு வன்மை தந்தருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இதன் விலை அணா 4.

பாலசிசந்திரிகா என்னும் குழந்தை வைத்தியம்:- இது தமிழ் நடையில் எழுதப்பட்ட மிக அருமையான வைத்திய நூல்.

இதில் குழந்தைகளுக்கு வியாதி வந்தால் அது இன்ன காரணத்தினாலுண்டானதென்றும் அதை நீக்க இன்னின்னது செய்ய வேண்டுமென்றும் மிகத் தெளிவாக எளிய தமிழ் நடையில் எழுதப் பெற்றிருக்கிறது. இந்நூலை இயற்றியவர் டாக்டர் மகா-ள-ள-ஸ்ரீ வி. பஞ்சநத ஐயர் அவர்கள் பல ஆங்கில வயித்தியர்களிடத்தும் தமிழ் வைத்தியர்களிடத்தும் கலந்து தெளிந்து அனுபவத்தாற் கண்டவைகளைப் பொது நலங்கருதி மிகுந்த செலவிட்டு அச்சிட்டுத் தாழ்ந்த விலைக்குத் தருகின்றார்.

இது ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு தாய்மாரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியதே. பெற்றோர் இப்புத்தக உதவியால் வயித்தியர் உதவியின்றியும் பணச்செலவின்றியும் சிரமமின்றியும் தம்மக்களுக்கு வியாதியைநீக்கவும் தம்மக்களுக்கு வியாதி வாராமற் காக்கவும் கூடும். இதன் விலை அணா 8.

சரமகவிகள்:- இது கூரு நாக்கல் டிஸ்டிரிக்டு இஞ்சினியர் ஸ்ரீ மத் தங்கச்சிப்பிள்ளை அம்மாளின் சாயுச்சியத்தைப் பற்றி மதுரைச் சங்கத்து வித்துவான்களும் யாழ்ப்பாணத்து வித்வான்களும பாடிய செய்யுட்டொகையை யுடைய புத்தகம். இதில் வேளாளர் சிறப்பும் கற்பின் சிறப்பும் சிவ பெருமானின் திருவருளின் மேம்பாடும், சைவசமயச் சிறப்பும் பாராட்டிக் கூறப் பெற்றிருக்கிறது. தமிழினினிமையும் செய்யுள் நயமும் படிப்பவர் கொண்டாடிக் குதூகலிக்கத் தக்கது.

இதனைப் பூர்வ சரிதச் சுருக்கத்துடன் அச்சிட்டு வெளிப் படுத்தி உலகிற்குப் பயன் செய்வித்தவர் யாழ்ப்பாணத்து ஆயுள் வேத பண்டிதரும் இப்பொழுது மதுரை வாசியுமாகிய நமது நண்பர் மகா-ள-ள-ஸ்ரீ ச. ஆறுமுகம் பிள்ளை அவர்களே. இவர்களின் உபகார சீலம் மெய்யறிவினர் விரும்பத் தக்கதே.

நெல்லூர் டிஸ்டிரிக்டு பாரஸ்ட் ஆபீசராக இருந்த ராவ் சாகப் ஸ்ரீமாந் நலலுசாமி நாயுடு அவர்கள் ரஜாவின்பேரில் திரிசிரபுரத்துக்கு வந்திருந்தபொது பிளவை கண்டு பரந்தாமனைச் சேர்ந்தார். இவருக்கு சற்றேறக் குறைய 45 வயது என்று கேள்வி. அவர் பிரிவிற்கு வருந்தும் அவர் குடும்பத்தாருக்குக் கடவுள் ஆறுதல் செய்வாராக.

இந்தியர்கள் உயர்ந்த உத்தியோகங்களுக்கு வருதல் மிக அருமையாக இருக்கின்றது. அபபடி வந்தாலும் இப்படிச் செப்பிடு வித்தை போல மாயமாக விடுகின்றார்களே. இதுவும அமலன் விளையாட்டோ?

திரிசிரபுரத்து வித்வானும் தமிழ்த் தெய்வத்திற்கே ஒரு அணியாய் விளங்கினவரும் பண்டைக் கால முறைப்படி ஆசிரியர்பால் தமிழை முக்குற்றமறக் கற்றவரும் தமிழ் நாடு முழுதும் சென்று தன் புகழை நாட்டினவரும் முப்பத்திரெண்டவதானங்கள் செய்யும் வன்மையாலே சோடச சத்வய அவதானி என்னும் பட்டம் பெற்றவரும் எஸ். பி. ஜி. கலாசாலையில் பல வருஷங்கள் தமிழ்ப் புலமை நடத்தினவரும் மருங்காபுரி ஜமீன் சமஸ்தான வித்வானென்ற பட்டம் பெற்றவரும் எண்ணற்ற பல பிரபந்தங்களும் தனிக் கவிகளும் கண்டோர் கேட்டோர் கொண்டாடும்படி அதி அற்புதமாகப் பாடியுள்ளவருமாகிய திரிசிரபுரம் வித்துவான் ஸ்ரீமாந் தி. அ. சோ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் நிகழும் விரோதிகிருது வருஷம் ஆனி மாதம் 18ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சிவபெருமான் திருவடி நிழலையடைந்தார். இவருக்கு இப்பொழுது 63 வயதாகிறது. இந்த 68 வயதிலுங்கூட முப்பத்திரண்டு அவதானங்களையும் தப்பற இயற்றி ஒப்பறு புகழ் பெற்றோங்கினர். இவர் தஞ்சைமாநகரில் அவதானம் செய்யச் சென்ற இடத்தில் ஒரு நோயுமின்றி வேலுமயிலும் என்னும் மந்திரமும் சடாட்சர மந்திரமும் நாத்தழுதழுப்புடன் கூறச் சாயுச்சிய முற்றார். இவர் பிரிவு பற்றித் தமிழகமே துயருறும் என்பதற்குஞ் சந்தேகமுண்டோ? இவர் போலும் புலவரை இனியும் காண்போமோ? இவர் குடும்பத்தார்க்கு முழுமுதற் கடவுளே ஆறுதல் செய்வாரென்று நம்பி அவ்வமலனைச் சிந்தித்து வந்திக்கின்றேம்.

திரிசிரபுரம் நாஷனல் ஐஸ்கூலில் தமிழ்ப்புலவராக இருந்த ஸ்ரீமாந் தி. ச. ஆறுமுகநயினாரவர்கள் ஆனி மாதம் 29 தேதி வியாழக்கிழமை சிவபெருமான் திருவடி நிழலையடைந்தார். இவர் இக்கழகத்தில் 22 வருஷம் ஆசிரியராயிருந்து அநேகமாணவர்களைத் தமிழ்ப்புலவராக்கியிருக்கின்றார். இவர் சைவசித்தாந்த சாஸ்திரத்தில் அதி அழுத்தமான ஞானமுடையவர் இவர் சைவபக்தியையும் சீலங்களையும மெய்யறிவினா விரும்பிப்புகழ்கின்றனர். இவர் உலகைப் பிரிந்தது உலகிற்கோர் பெரு நஷ்டமே. இவர் குடும்பத்திற்கு எமது சிவ பெருமான் தமது திருவருளால ஆறுதல் செய்வாராக.

# சமாச்சாரக் குறிப்புகள்

**உருவத்தாற் பெரிய மனிதன்:-** அமெரிகா கண்டத்தின் வடக்கிலுள்ள கனடா தேசத்தில் ப்ராஞ்சு ஜாதியானாகிய எட்வர்ட் பாவா என்பவன் 11 அடி உயரமுள்ளவனாயிருக்கிறான். அவனுக்கு வயது 30. அவன் நிறை 587 ராத்தல், அவன் கை 18 இஞ்சும், பாதம் 24 இஞ்சு நீளமும் 12 இஞ்சு அகலமும் இருக்கின்றன, அவனுடைய உடுப்பு சாதாரண மனிதர்களில் பத்துப் பேர் அணியலாம். இவன் சிறு வயது முதல் சரீர விஷயத்தில் அதிக கவனத்தைச் செலுத்தி வந்ததால் எப்போதும் உற்சாகியா யிருக்கின்றானாம்.

**யானை தன் எஜமானனைக் காத்ததாம்:—** ரங்கூன் பாகத்தில் கூர்க்க ஜாதியைச் சேர்ந்த ஒரு மாவுத்தன் தனது யானையை நன்றாய்க் கழுவிக் குளிப்பாட்டி நாணலடர்ந்த காட்டிற்கு மேய்க்க நடத்திக்கொண்டு போனானாம் அப்பொழுது ஒரு புலி அம் மாவுத்தன் மேல் பாய்ந்து தனது கூரிய நகங்களால் அவனைக் கிழிக்க யத்தனிக்கையில் மாவுத்தன் "கூகூ" என்று கத்தினானும் தனது எஜமானனது பரிதாபக் குரலைக்கேட்ட யானை உடனே ஓடிவந்து புலியைத் தனது பின்னங்காலால் ஒரு உதை கொடுத்ததாம், யானை கொடுத்த உதையால் புலி உருண்டு சற்று தூரத்திற்கப்பாற் போய் விழுந்து இரத்தத்தைக் கக்கிக்கொண்டு இறந்ததாம். மாவுத்தன் ஆஸ்பத்திரியில் இருக்கிறானும் அவனுக்கு குணமாகிக் கொண்டு வருகின்றதாம்.

(ரங்கூன் கெஜட் மே-மீ 7-உ)

**லாயர் பெண்:—** பம்பாய் சர்வ கலாசாலையில் "டிஸ் இஞ்சினீர்" என்கிற பார்சி மாது எல். எல். பி. என்கிற லாயர் பரீக்ஷையில் தேறி பட்டம் பெற்றிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்தியாவில் பெண் லாயரானது இதுவே முதல் தடவை. இம்மாது முன்னமேயே எம். ஏ. என்கிற பட்டமும் பெற்றாயிற்றாம்.

**ஓர் உத்தமி:—** சமீபத்தில கல்கத்தாவில் 22 வயதுள்ள சுந்தரி என்னும் குலமகள் நோயாயிருந்தும் தனது கணவன் பிழைக்கமாட்டானென்று நிச்சயமாக அறிந்ததனால் சுமங்கலியாக இறக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கங்கா தீர்த்தத்தைக் கொண்டுவந்து தனது கணவனது வாயில் விட்டு பிறகு தன்னை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு ஓரறைக்குட்சென்று உடல் முற்றும எண்ணெயை யூற்றிக் கொண்டு தீயிட்டுக் கொண்டு மாண்டாளாம். தன்னை ஜலம் விட்டுக் காப்பாற்ற வந்தவர்களை அவ்வாறு செய்யவேண்டாமென்று தடுத்துவிட்டனளாம். (P. L.)

அந்துப் பூச்சி நிவாரணி:— நெல் துவரை முதலிய தானியங்களை அந்துப் பூச்சி அழிக்காதபடி காப்பற்றுதற்கு ஒரு கண்டைக் கொன்று தானியக் குவியலின் மேல் நேரே கட்டித் தொங்கவிட்டால் அந்துப்பூச்சி அண்டாதாம் இதைப் பலபேர் செய்து பயன் பெற்றிருக்கிறார்களாம். இது சுகாதாரம், சுத்தம் என்பதற்கு ஏற்றதாக இல்லாவிடினும் பயன் பெரிதாக இருக்கிறது.

இந்தியா முன்னுக்கு வந்துவிட்டது:—தஞ்சாவூர் ஜில்லா பின்னத்தூரில் ஸ்ரீமாந் பி ஏ. சுப்பிரமண்ய ஐயர் என்பவர் தேங்காய் கொட்டாங்கச்சியில் அழகான புத்தான்கள் செய்கின்றனராம்.

புதுமை:— இருட்டிலும் விளக்கின் உதவி இன்றி எழுதக்கூடிய மின்சாரப்பென்சல் ஒன்று புதிதாக அமைத்திருக்கிறார்களாம்.

இதுவும் ஓர் பெரும் புதுமையே:-ருஷியாவிற்குத் தலை நகரான ஸெண்ட் பிட்டர்ஸ்பர்க்கிலுள்ள பிரோஃஸிங் என்னும் புலவர் வெகு தூரத்தில் நடக்கிற சங்கதிகளை இருந்த இடத்திலிருந்தே தெரிந்து கொள்வதற்காக ஒரு யந்திரம் ஒன்று கண்டு பிடித்திருக்கிறாராம்.

பெரிய இலை:— அமேஜான் நதிக்கரையில் வளரும் ஒருவித மரத்தின் 'இஜனு' என்னும் இலையே உலகத்திலுள்ள இலைகளிற் பெரிதாம். இதன் நீளம் 50 அடி, அகலம் 12 அடி.

நவீன சவுக்கு:—ஐரோப்பாவில் யந்திர வியக்கத்தால் தாறுமடிக்கும் சவுக்கு ஒன்று கண்டு பிடித்து உபயோகப்படுத்தி வருகிறார்களாம். அறிவு உடையார்க்கு எது அசாத்தியம். ஒரே யிடத்தில் அடி விழுகிறதுமில்லையாம்.

விந்தை:— இங்கிலாந்து தேசத்தைச் சார்ந்த கிலாஸ்ரஸ் என்னும் மாகாணத்திலுள்ள ஆடிங்டன் என்னும் பட்டணத்தில் வாசம் செய்யும் ஓர் துரைசானி நல்ல திட காத்திரமுள்ள இரண்டு பசுக்களிருக்கின்றனவாம். சில தினங்களாகப் பால் குறைவாக இருந்தமையால் காரணம் அறியாத அம்மாவின் பால் காரன் மாடுமேயும் புல் மைதானத்திற்சென்று பார்த்தபொழுது ஒரு மாடு புல்லில் சுகமாகப் படுத்துக் கிடந்ததாம், படுத்துக் கிடந்த மாட்டுக்குச் சமீபமாய் அவன போனபோது இரண்டு பெரிய பாம்புகள் அம்மாட்டின் மடியில் பால் குடித்துக்கொண்டு கிடந்தனவாம். (நமது புராணங்களின் உண்மைகளை இனியேனும் நம்புவார்களாக,)

பாம்பும் சாமியாரும்:—பர்மாவில் பீமா என்னும் ஊரில் ஒரு காட்டு மத்தியில் சாமியார் மடம் ஒன்றிருக்கிறதாம், அதில் ஒரு சாமியார் தனியாக இருக்கிறாராம். இவரை ஒரு பெரிய கிருஷ்ண சர்ப்பம் காவல் செய்துகொண்டிருக்கிறதாம். இவர் தூங்கும் போதும் கண்ணை மூடிக்கொண்டு யோகம் செய்யும்போதும் அது அவர் தலை யண்டையிலிருந்து காவல்செய்கின்றதாம்.

பரம்பும் சாமிய ரூமாக்க் கர்ட்டில் பழுக்கும் பழங்களைப் பரித்து ஒன்றாயிருந்து சாப்பிடுகிறார்களாம். (பர்மா பத்திராதிபர் ஒருவர் எழுதுகின்றார்.)

இது வன்றோ நாடு முன்னுக்கு வரவழி:—ஜப்பான் ராஜ்ஜியத்தில் ஐரோப்பிய நாகரீகம் பரவிய பின் பல வர்த்தமானப் பத்திரிகைகள் வெளியாகிவருகின்றதாம். ஒவ்வொரு வருஷமும் பத்திரிகைகள் ஏராளமாகப் பெருகிவருகின்றனவாம். 1852 ம் வருஷத்தில் முதல் முதல் பத்திரிகை வெளிபடுத்த ஆரம்பித்தார்களாம் அது முதல் இதுவரை 4000 வருத்தமானப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றனவாம். "டிலீஸ்கிப்போ" என்னும் பத்திரிகைக்கு மட்டும் நான்கு லக்ஷம் சந்தாதார்கள் இருக்கிறார்களாம். இவ்விதமிருந்தாலன்றோ ஜப்பான் உன்னத பதவிக்கு வந்துவிட்டது.

## புத்தகங்கள் புதிதாக அச்சடும் நூலாசிரியர்களுக்கு

ஐயன்மீர்! நீங்கள் அச்சிடும் புத்தகங்களை எங்கள் ஆபீசுக்கு கமிஷன் சேலுக்கு அனுப்புவீர்களேயானால் நாங்கள் எம்மாற் கூடிய வரையில்முயற்சி செய்து புத்தகங்களை விற்றுப் பணமனுப்புவோம்.

புத்தகம் தமிழ் வளர்ச்சி கருதியதாக இருத்தல் வேண்டும். பொது நன்மைக்கு ஏற்றதாகவும் இருத்தல்வேண்டும்.


## விளம்பரம்.

**கவனியுங்கள்! கவனியுங்கள்!! கவனியுங்கள்!!!**

தமிழ் விருத்தி கருதி அருமையான தமிழ்ப் புத்தகங்கள் பலவற்றை வருவித்து மற்ற இடங்களில் கிடைக்கும் விலைக்குச்சாசமாகவே விற்பனை செய்கின்றோம். எம்மிடத்து சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள் இன்னுமுள்ள இலக்கண இலக்கிய புத்தகங்களும் மற்றுமுள்ள நவீன நாவல்களையும் விலை சாசமாகப் பெறலாம். சீக்கிரத்தில் எமதுபுத்தகசாலைக் காட்லாக்குவெளிவரும்.

**திருநெல்வேலிப் புராணம்:**— இது ஸ்ரீ நெல்லையப்பக் கவிராயரவர்களால் செய்யுள் ரூபமாக முன்பு அமைக்கப்பெற்ற பெரியதொரு புராணத்தை யாவரும் படித்துணருமாறு நடைப்படுத்தப் பெற்றது. இப்புராணத்திற் கூறப்படும் சரிதங்கள் மிகப்பலவாதலால், நம்மவர் அப்பெரு நூலைக்கொண்டு அவற்றைத் தெரிந்துகொள்வதினும் எளிதில் இவ்வசனத்தால் அறிந்துகொள்ளலாம். இப்புராணத்தின் நடை இனிமை வாய்ந்தது. ஒவ்வொரு சருக்கத்தும் அதன் கருத்தமைந்த துதிக்கவி யொன்றமையப் பெற்றது.

கடவுள் வாழ்த்து பாயிரம் முதலியன புதிதாகவும் கற்பனையோடும் அமைந்துள்ளது. உயர்ந்த காகிதத்தில் சிறந்த எழுத்துக்களால் பதிக்கப்பெற்றிருக்கிறது. நல்ல பயிண்டு 55 பாரம் 440 பக்கம்கொண்டது இரண்டுரூபாய்க்கு விற்றது. இப்பொழுது ரூ. 1—0—0க்குவிற்கின்றோம். சொற்ப காப்பிகள் தான் இருக்கின்றன.

மானேஜர்,

**செந்தமிழ்ச் செல்வம் அண்டு கோ.**

நெ. 31 வெள்ளை வெற்றிலைக்காரத் தெரு, திரிசிரபுரம்.

# A VALUABLE ASSET FOR VACANCY SEEKERS.

## THE NATIONAL TYPE-WRITING INSTITUTION.

**Sanjeevi Row's lane [Near Little Market]**

*TRICHINOPOLY.*

Superior place for learning. Experts employed on our staff.

Perfect order and discipline maintained.

**Imparts instructions in:—**

Type-writing — Book-keeping and
Shorthand — Commercial correspondence.

STUDENTS ARE COACHED UP FOR THE GOVERNMENT AND LONDON EXAMINATIONS.

BY

SPECIALISTS AND PROFESSIONAL MEN HOLDING FIRST CLASS CERTIFICATES.

*Fees*:—Moderate payable by Instalments.

Free admission will be allowed in the case of students who cannot afford to pay their school fees.

*Games*:—Special arrangements are made for games such as Badminton and Foot-Ball.

Scholarships are awarded to students passing their Examination with distinction.

*Business hours*:—

| | |
|---|---|
| Shorthand and Book-keeping. | 6-30 to 8-30 A. M. |
| Type-writing class. | Through the day. |

| | | |
|---|---|---|
| Mechanism on Yost and Remington a Speciality. | Pitman's Journal and Library open to all Students. | Jobworks undertaken. Execution neat. |

*For further particulars apply to:—*

**Mr. V. N. Barathy.**

*Manager.*

**ஆயுள்வேத முறையும் ஐரோப்பிய முறையும் கலந்து செய்த பக்குவங்கள்.**

Spermatorrhoea specific:— *இது ஓர் நூதன மருந்து சொர்ப்பனஸ்கலிதம், தாது கட்டுமான மில்லா திருத்தல் இவைகளுக்கு கை கண்டது 24 வேளைமருந்தில் குணப்பட்டுவிடும் பத்தியமில்லை ராஜாக்கள் மருந்து. படிக்கும் மாணாக்கர் இதைக் கவனிக்கவும். ரூ. 2-0-0.*

குழந்தைகளுக்கு

Health pills:— (குழந்தைகளுக்கு சுகமாத்திரை) புட்டி அணா 4 மாத்திரம். ஜுரம், ஜன்னி, வலிப்பு, மந்தம், வயற்றுப்பொருமல், சகலத்திற்கும் அருமையானது. நன்றாய் மல்விர்த்தியாகும், வாரம் ஒரு முறை இதைக் குழந்தைகளுக்கு உபயோகித்து வரவேண்டியது. அநேக தலைமுறையாய் அனுபோகமான மருந்து.

**பல் வியாதிகள்.**

பல்வியாதி சகலத்திற்கும் எங்கள் குரு பல்பொடிக்கு நிகரானது வேறில்லவேயில்லை என்று திட்டமாய்ச் சொல்லக்கூடும். சகல தந்த நோயும் தீரும். நோய்வராமலும் பாதுகாக்கும் பொடி இது.

புட்டி அணா 4.

☞ எங்கள் மருந்து சாலையில் சகல வியாதிக்கும் கைகண்ட அவுஷதங்கள் இருக்கிறது. எல்லாம் ஆயுர்வேத முறை கலந்த பக்குவங்கள் தான். வியாதிக்கு ஏற்ற மருந்துகள்.

☞ வியாதிகளைப் பற்றி தெரியப் படுத்தினால் சரியான மருந்துகள் தபால் மூலம் அனுப்புவோம்.

விலாசம்.

**டாக்டர் ஏ. மதுரம்.**
திருச்சினாப்பள்ளி.



பண்டிதர் K, S. **கிருஷ்ணசாமி** ஐயருடைய **'எலக்டிரிக்பாம்'** என்னும் சூலைநிவாரணித் தைலம், இத்தைலத்தை மேலுக்கு தேய்ப்பதினால் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்புநோய், பிடிப்பு. பக்கநோய், தலைவலி, ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல்யீர் வீக்கம், தொண்டை கம்மல், இருமல், மார்சளி, ஜலதோஷம், இசிவு, சுளுக்கு, தேள் கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த பிழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம்.

விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், P. **கணேசரத்னம் பிள்ளை**
கடைத்தெருவு 86 நெ. கடை, சேலம் &.
**சர்மா & கோ,**
திருச்சினாப்பள்ளி தெப்பக்குளம்.
இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

**வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபடுத்துவத்தையும் திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான**
**இரண்டு உயர்ந்த ரத்னவுஷதங்கள்.**

# மதன மஞ்சரி மாத்திரைகள்.

"நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும், ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

இவை

1. ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திருடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துத் தருவவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## தபும்ஸகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜன்மேந்திரிய நரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தண்மைக்குறைவிற்கும் கைக்கண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ. 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரியமுண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வெள்வுஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் நாங்கள் தேடாமலும், கேளாமலும் அனுப்பியிருக்கிறார்கள்

மேலே சொல்லிய மருந்துக்களைப்பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும க்ஷேமத்துக்கும பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில் வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாகியிருக்கின்றன.

## ராஜவைத்திய நாராயண்ஜி கேசவஜி.

புரொப்ரைட்டர் ஆயுர்வேதோதய ஔஷதாலயா

No. 177, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.

# நன்கொடையாளர்களுக்கு வந்தனம்.

பாவமே தலை எடுத்து அறங்கள் குறைந்து கொண்டு வரும் இக் கலிகாலத்தில் தர்மவான்கள் மிக அருமை! மிக அருமை!!

பொன்னைத் திரள் திரளாகக் குவித்திருக்கும் புண்ணியவான்கள் மேலும் மேலும் புண்ணியஞ்செய்து மேன்மை எய்தாது முற்பிறப்பிற் செய்த பாவசம்பந்தத்தால் பெற்ற பொருளை உற்ற அறவழியிற் செலவு செய்து புகழ் பெற்றுப் புனிதமுற்று இன்பெய்தாது அதர்மமான வழிகளிலும் தீய வழிகளிலும் தம் பொருளைச் செலவிட்டு நோய்கொண்டு தட்டுக் கெட்டலைந்து நரகத்திற்காளாகின்றனர். அந்தோ! அவர் பெற்ற செல்வத்தால் பெற்ற பயனிதுவேயோ?

பொன்னுடையார் புகழுடையராயும் பொருந்திய அறவழியிற் செலவிட்டு இன்புடையராயுமாதலே முக்கியம். இதுவே பொன்பெற்றதாற் பெறும் பயனும். இதுபற்றியன்றோ,

“ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண் அவர்” என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்.

தெய்வப் புலமை ஔவையாரும் அறவழியிற் செலவிட்டுப் புகழ் பெறார் பொருள் பிறவழிற் செலவிடப் பெற்று அவர்க்கு இகழ்ச்சியையுண்டாக்கிவிட்டுப் போம் போகாது நில்லாது என்னும் பொருள்படத் தமது அருமைத் திருவாக்கால்.

“நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்” என்றருளிச்செய்திருக்கின்றாள்.

நிற்க, “நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்லே செயிற் செய்க” என்னும் ஆன்றோர் மொழியைப் பொருளொடு கற்றுணர்ந்து தெளிந்தவரும் உலகெல்லாம் என்றும் புகழ, ஏழைகளுக்கு பழையவமுது அளித்து வந்ததுமன்றித் தனக்குப் பின்னும் அக்கைங்கரியம் நடை பெறுமாறு தனது சொத்தில் ஒரு பாகத்தை நிலையாக ஏற்படுத்திய பக்திமானும் சென்ற ஆண்டிலே பரிபூரணமுற்றவருமாகிய பழைய சோற்றுப் பரமசிவம் பிள்ளை (ஏழைகளுக்கும் பழைய சோறிடுவதால் காரணப் பெயராக

ஏற்பட்டுள்ளது.) அவர்களின் தம்பி குமாரராகிய வரும் இன்னும் தனது பெரிய தந்தையாரைப் போற் சிறந்த குணம், பக்தி, பெரியோரிடத்து விசுவாசம், தர்ம சிந்தை, அடக்கம், அருள் முதலிய எல்லாச் சுகுணங்களும் பூண்டு அவர் நடத்திவந்த ஏழைகளுக்குப் பழைய சோறிடும் கைங்கரியத்தை ஒழுங்காக இன்றும் நடத்திவருபவருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ சிவசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் நமது "செந்தமிழ்ச் செல்வத்திற்கு" நன்கொடையாக 50 ரூபாய் அளித்ததுமன்றிப் பொருள் முட்டுப்பாடு ஏற்படுங் காலங்களிலெல்லாம் கொடுத்து உதவுவதாக வாக்களித்து "செந்தமிழ்ச் செல்வம் எங்கும் உலாவிப் புகழ் பெறுவதைக்கண்டுங் கேட்டுங்களிக்கும் அவர் வள்ளன்மையையும் பரோபகார குணத்தையும் தமிழ் மக்கள் பாராட்டிப்புகழாதிரார் என்று நினைக்கின்றோம். எம்மோடு ஒத்து தேகத்தாலும் வாக்காலும் பொருளாலும் எண்ணத்தாலும் உதவி செய்தும் செய்து கொண்டுமிருக்கிற இப்பிள்ளை அவர்களுக்கு மனதார நன்றி பாராட்டி வந்தனஞ் செலுத்துகின்றோம். இவர் உலகிற்கு உதவியாக நெடுநாள் சுகதேகியாக வாழ இறைவனைத் திரிகரணத்தாலும் சிந்தித்து வந்திக்கின்றோம்.

இன்னும் செந்தமிழினிடத்து அபிமானம் வைத்து 15 ரூபாய் தனித்தனியாக நன்கொடை செய்த உபகார சீலர்களும் வள்ளற்றன்மையுடையவர்களுமாகிய திரிசிரபுரம் கள்ளத்தெருவு நாட்டாண்மை மகா-ள-ள-ஸ்ரீ T. M. முத்துசாமி பிள்ளை அவர்களுக்கும், திரிசிரபுரம் கள்ளத்தெருவு மிராசுதார் மகா-ள-ள-ஸ்ரீ T. P. P. மாணிக்கம் பிள்ளை அவர்களுக்கும் நனி மிகவந்தனஞ் செலுத்துகின்றோம்.

இஃதன்றி, பத்திரிகை எங்கும் பரவத்தக்கனவாயன்ற உதவிகளெல்லாஞ் செய்யும் சேலம் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ கு. ஐயாக்கண்ணு முதலியாரவர்களுக்கும், திண்டுக்கல் முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ கு. வீராசாமி பிள்ளை அவர்களுக்கும், போர்ட்பிளேயர் அசிஸ்டண்டு சர்ஜன் ராவ்சாகப் மகா-ள-ள-ஸ்ரீ T. சதாசிவம் பிள்ளை அவர்களுக்கும், திரிசிரபுரம் கள்ளத்தெருவு மிராசுதார் மகா-ள-ள-ஸ்ரீ T. A. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும் தாராஜுர் மகா-ள-ள-ஸ்ரீ T. அருணஜலம் பிள்ளை அவர்களுக்கும் மனதார வந்தனஞ் செலுத்துகின்றோம்.

நமது "செந்தமிழ்ச் செல்வம்" நின்று நிலைத்துச் செழித்து வளர்ந்து பரவ தம்மாலியன்ற உதவிகளை எல்லாம் செய்யும் உபகார சீலர்களுக்கெல்லாம் நன்றி காட்டி வந்தனஞ் செலுத்துகின்றோம், இவர்கள் நீடூழி சுகத்துடன் வாழ எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை மன்றாடி இறைஞ்சி வேண்டிக்கொள்ளுகின்றோம். சுபம்!

பத்திராதிபர்.